கோபுர தரிசனம் !
கோடி புண்ணியம் !!

ஆலய தரிசனம் !
பாப விமோசனம்!!








**ஸ்ரீ விநாயகர் துதி**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே.

**ஸ்ரீ செல்லாண்டியம்மன் துதி**

கார்மேவு கணிவோடும் பார்மீது பணிவோர்க்கு
சீர்மேவு சிறப்பளிக்கும்
காக்காவேரி நகர்தனில் வாழும்
ஸ்ரீ செல்லாண்டியம்மன் திருப்பாதம் பணிவோம்.

## காக்காவேரி அருள்மிகு ஸ்ரீ செல்லாண்டியம்மன்
## ஆலய புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன
# மகா கும்பாபிஷேக பெருவிழா அழைப்பிதழ்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம்,

**காக்காவேரி** கிராமத்தில் எழுந்தருளியுள்ள

விளையன்குல குலதெய்வமாகிய

**அருள்மிகு ஸ்ரீ விநாயகர்,**

**அருள்மிகு செல்லாண்டியம்மன்,**

**அருள்மிகு கன்னிமார் தேவி,**

**ஸ்ரீ கருப்பண்ணசாமி, ஸ்ரீ எல்லை கருப்பனார்,**

**ஸ்ரீ மகாமுனி புதிய இராஜகோபுரம் மற்றும்**

**சக பரிவார தெய்வங்களின் ஆலய**

**மஹா கும்பாபிஷேக பெருவிழா**

சோபகிருது வருடம் ஆவணி 31
17.09.2023, ஞாயிற்றுக்கிழமை



காலை : 8.45 மணிக்குமேல்
9.45 மணிக்குள்

உ

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், காக்காவேரி கிராமம்,

# அருள்மிகு ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ செல்லாண்டியம்மன் திருக்கோயில்

## புதிய இராஜ கோபுரம் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன

# மஹா கும்பாபிஷேக பெருவிழா அழைப்பிதழ்

இறையன்புடையீர்!

காள்காவேரி தண்ணீர் வந்ததால் காக்காவேரி என்னும் பெயர் சித்தி பெற்ற இடத்தில் எழுந்தருளியிருக்கும் எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரரின் தனிப்பெரும் கருணையினாலும், குருவருளும், திருவருளும் இணைந்த வண்ணமாகவும், அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஓங்கார நாயகியாய் வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் தரும் அகில உலகத்திற்கும் ஆதார சக்தியான அன்னை ஆதிபராசக்தியின் அங்கமான **ஸ்ரீ செல்லாண்டியம்மன் திருக்கோயிலை** புதுப்பித்து, புதியதாக **இராஜகோபுரம்** அமைத்து, கிழக்கு **ஸ்ரீ எல்லை கருப்பனார் மற்றும் ஸ்ரீ மகா முனிக்கும்** நாளது சோபகிருது வருடம் **ஆவணி மாதம் 31ம் நாள் ஞாயிற்றுக்கிழமை 17.09.2023** துவிதியை திதியும், அஸ்த நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் **காலை 8.45 மணிக்கு மேல் 9.45 மணிக்குள்** துலா லக்னத்தில் **ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ செல்லாண்டியம்மன், ஸ்ரீ கன்னிமார்தேவி, ஸ்ரீ கருப்பண்ணசாமி மற்றும் பரிவார தெய்வங்களாக உள்ள ஸ்ரீ வைஷ்ணவி, ஸ்ரீ நாராயணி, ஸ்ரீ துர்க்கை** ஆகிய தெய்வங்களுக்கு,

சிவகிரி ஆதினம் 75-வது குருமஹா சன்னிதானம் உத்தண்ட ராஜகுரு

டாக்டர். **S. பாலமுருகன்** ஈசான சிவாச்சாரிய சுவாமிகள்

முன்னிலையில்

PGP குழுமத் தலைவர், டாக்டர். **பழனி, ஜி.பெரியசாமி** அவர்கள்

தலைமையில்

**கும்பாபிஷேக சர்வ சாதகம்**

சிவாஹம மணி சிவஸ்ரீ **ஸ்ரீனிவாச ரகு குருக்கள்** அவர்கள்

ஸ்ரீ புரந்தரீஸ்வரர் திருக்கோயில், காக்காவேரி

சர்வ சாதகம் செய்ய தெய்வ அருள் கூடிவந்து அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதால். அது சமயம் காக்காவேரி விளையன் குல பங்காளிகள், பக்த கோடி பெருமக்கள் கும்பாபிஷேக விழாவில் குடும்பத்துடன் கலந்து கொண்டு ஸ்ரீ செல்லாண்டியம்மன் திருவருளை பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனைவரும் வருக.! அருளாசி பெறுக.!!!

இங்ஙனம்

**தலைவர்**

காக்காவேரி அண்ணமார்சாமி விளையன்குல கொங்கு வெள்ளாளக் கவுண்டர்கள் அறக்கட்டளை

**தர்மகர்த்தா**

காக்காவேரி அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயில்

**கும்பாபிஷேக விழா குழு** மற்றும்

**காக்காவேரி கவுண்டர்கள் சமூகத்தார்கள்**

# நிகழ்ச்சி நிரல்

| தேதி, நாள், நேரம் | யாகசாலை நிகழ்ச்சிகள் |
|---|---|
| **ஆவணி 28 ஆம் நாள்**<br>**14.09.2023 வியாழன்**<br>இரவு 8.00 மணி | கிராம சாந்தி |
| **ஆவணி 29 ஆம் நாள்**<br>**15.09.2023 வெள்ளி**<br>காலை 7.00 மணி | மங்கள இசை, ஸ்ரீ விக்னேஷ்வர பூஜை, புண்யாகவாசனம், பஞ்சகவ்யம், மஹா கணபதி யாகம், மஹா இலட்சுமி யாகம், நவக்கிரக யாகங்கள், பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| காலை 9.00 மணிக்கு | மோகனூர் காவிரி ஆற்றிலிருந்து தீர்த்தம் எடுத்து வர புறப்படுதல். |
| மதியம் 2.00 மணிக்கு | காக்காவேரி ஸ்ரீ அண்ணமார்சாமி திருக்கோயிலில் இருந்து பம்பை, மேள வாத்தியங்களோடு முளைப்பாரி, தீர்த்தம் ஊர்வலமாக எடுத்து வருதல். |
| மாலை 6.00 மணிக்கு | **முதல் கால யாக பூஜை**<br>மங்கள இசை, ஸ்ரீ விநாயகர் பூஜை, புண்யாகவாசனம், வாஸ்து சாந்தி, ம்ருத்ஸங்கிரஹணம், சோமகும்ப பூஜை ரக்ஷாபந்தனம் (கங்கணம் கட்டுதல்), கலாகர்ஷனம் என்று சொல்லக் கூடிய பாலாலயத்தில் பிம்பரூபமாக உள்ள இறைசக்திகளை கும்பரூபமாக யாக சாலையில் எழுந்தருளச் செய்து வேதிகார்ச்சனை, மண்டபார்ச்சனை **முதல் கால யாக பூஜை,** திரவிய யாகங்கள் பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| **ஆவணி 30 ஆம் நாள்**<br>**16.09.2023 சனி**<br>காலை 8.30 மணிக்கு | **இரண்டாம் கால யாக பூஜை**<br>மங்கள இசை, ஸ்ரீ விநாயகர் வழிபாடு, புண்யாகவாசனம், விஷேச சாந்தி, பூதசோதனம், பஞ்சகவ்யம் **இரண்டாம் கால யாக பூஜை,** மூலிகை திரவிய யாகங்கள், பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| காலை 10.30<br>மணிக்குமேல்<br>11.45 மணிக்குள் | மூலாலயத்தில் ஸ்ரீ செல்லாண்டியம்மனுக்கு யந்திர பிரதிஷ்டை செய்து பரிவார தெய்வங்கள் அனைத்திற்கும் அஷ்டபந்தன மருந்து சாற்றுதல், கோபுரத்தில் தானியங்கள் நிரப்புதல், கலசம் வைத்தல், ஸ்தபதியார் விமானம் கண் திறப்பு பூஜை. |
| மாலை 5.00 மணிக்கு | **மூன்றாம் கால யாக பூஜை**<br>மங்கள இசை, ஸ்ரீ விநாயகர் வழிபாடு, புண்யாகவாசனம் **மூன்றாம் கால யாக பூஜை,** அம்பிகைக்கு சஹஸ்ரநாமம் என்று சொல்லக்கூடிய 1008 நாமங்களை கொண்டு அர்ச்சனை, சிறப்பு யாக வழிபாடு, பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| **ஆவணி 31 ஆம் நாள்**<br>**17.09.2023 ஞாயிறு**<br>காலை 5.30 மணிக்கு | **நான்காம் கால யாக பூஜை**<br>மங்கள இசை, ஸ்ரீ விநாயகர் வழிபாடு, புண்ணியாகவாசனம் **நான்காம் கால யாக பூஜை,** தத்வ சம்யோஜனம் என்று சொல்லக் கூடிய இறை சக்திகளை மூலாலயத்தில் சேர்க்கும் நாடி சந்தானம், ஸ்பர்ஷாஹுதி, திரவ்யாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| காலை 8.30 மணிக்கு | கலசங்கள் யாக சாலையிலிருந்து திருக்கோயில் வலம் வந்து மூலாலயம் புறப்படுதல். |
| காலை 8.50 மணிக்கு | இராஜ கோபுரம் மற்றும் ஸ்ரீ செல்லாண்டியம்மன் கோபுரத்திற்கும் ஒரே சமயத்தில் **மஹா கும்பாபிஷேகம்** நடைபெறும் |
| காலை 9.10 மணிக்கு | மூலாலயத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ மகாகணபதி, ஸ்ரீ செல்லாண்டியம்மன், ஸ்ரீ கன்னிமார் தேவி, ஸ்ரீ கருப்பண்ணசாமி மற்றும் ஸ்ரீ மகாமுனி முதலான அனைத்து தெய்வங்களுக்கும் **மஹா கும்பாபிஷேகம்** நடைபெறும். |
| காலை 10.00<br>மணிக்குமேல் | **மஹா அபிஷேகம் அலங்காரம், தசதானம், தசதரிசனம்** கோ பூஜை, தீபாராதனை, முளைப்பாரி கரைத்தல், பிரசாதம் வழங்குதல் விழா மங்கள நிறைவு!! |

சுபம்

## 17.09.2023, ஞாயிற்றுக்கிழமை காலை முதல்

## சிறப்பு அன்னதானம் நடைபெறும்.





**மங்கள இசை :**

திரு. **R. சுந்தரம்** குழுவினர், சேந்தமங்கலம்.

**ஸ்தபதியார் :**

திரு. **பொ. தனசேகர்**, த/பெ. பொன்னுசாமி,
நாமக்கல். செல் : 94435 01885

**குறிப்பு**

யாக சாலை பூஜைகளில் வேத சிவாகம திருமுறைப் பாராயணங்கள் நடைபெறும்.
யாக சாலை பூஜைக்குத் தேவையான பால், தயிர், நெய், பட்டு வஸ்திரங்கள், நவதானியங்கள், இளநீர், தேன், பூ வகைகள், தேங்காய், பழ வகைகள், சமித்து வகை குச்சிகள் மற்றும் அன்னதானத்திற்கு தேவையான அரிசி, பருப்பு காய்கறி வகைகள் வழங்கி அம்மன் அருளைப் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## 18.09.2023, திங்கட்கிழமை முதல்

## 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

**மண்டலாபிஷேகத்திற்கு முன்பதிவு செய்பவர்கள்**

தொடர்புக்கு : **96779 48101, 94433 34722**

**கலை நிகழ்ச்சி**

16.09.2023, சனிக்கிழமை, இரவு 8.00 மணியளவில்

## சிறப்புப் பட்டிமன்றம்

தலைப்பு : **பக்தியிலும் பண்பாட்டிலும் உயர்ந்து நிற்பவர்கள் ஆண்களா..? பெண்களா..?**

நடுவர் : கலைமாமணி நகைச்சுவைப் பேரரசு
பேராசிரியர். டாக்டர். **அரசுபரமேசுவரன்** M.A., M.Phil., Ph.D., குழுவினர்
நாமக்கல்.

**ஆண்களே!**
“நகைச்சுவை இமயம்”
புலவர். **சுரேந்திரன்** M.A., பொள்ளாச்சி
கோவை **தனபால்** M.A.,
கவிஞர். **ரவிக்குமார்** M.A., ஈரோடு.

**பெண்களே!**
“கொங்கு செல்வி”
புலவர். **சாந்தாமணி** M.A.,கோவை
கவிஞர். **பொன். பூங்கொடி** கோவை
டாக்டர். **கவிதா** M.A., Ph.D., திண்டுக்கல்.

Ultima-94422 25322